# அரசு தமிழ் மேல்நிலைப்பள்ளி, சாலை, திருவனந்தபுரம்

கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் வாழும் தமிழ் மக்களுக்காக தமிழ் மொழியில் மட்டும் இயங்கும் ஒரு தமிழ் பள்ளிக்கூடம், தமிழ் ஆர்வலரான திரு. சு. க. கணபதியப் பிள்ளை அவர்களால் ஆரியசாலையில் உள்ள ஒரு வாடகைக் கட்டிடத்தில் 'செந்தமிழ் பாடசாலை' என்ற பெயரில் **1960** – ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் தமிழ் ஆர்வம் கொண்ட திரு. எம். எஸ். ரெட்டியார் அவர்கள் இப்பள்ளியை வாடகைக் கட்டிடத்திலிருந்து செந்திட்டையில் உள்ள தன் சொந்த கட்டிடத்திற்கு மாற்றினார். பல முயற்சிகளுக்குப் பின்னர் இப்பள்ளி அரசு தமிழ் பள்ளிக்கூடமாக கேரள அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இந்தப் பள்ளிக்கூடத்திற்காக தமிழ் ஆர்வலர்களான திரு.டி. முத்தையா பிள்ளையும், அவரது சகோதரர்களும் தங்கள் சொந்த நிலத்தைக் கொடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு **1998** – இல் ஆசிரியர் பயிற்சி நிறுவனமும், **2000**– இல் **Vocational Higher Secondary** – யும், **2002** – ல் **Higher Secondary** – யும் செயல்படத் தொடங்கியது. தற்போது இங்கு **High School, Higher Secondary, Vocational Higher Secondary** ஆகிய மூன்று பிரிவுகளும் தனித்தனியாக இயங்கி வருகின்றது. உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் **84** மாணவர்கள் பயில்கிறார்கள். இப்பள்ளியின் நடுநிலைப் பிரிவில் **3** ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளியில் **6** ஆசிரியர்கள், மாணவ கவுன்சிலிங் ஆசிரியர் ஒருவர், **4** அலுவலக பணியாளர்கள் மற்றும் ஒரு தலைமை ஆசிரியர் என **15** பேர் பணியாற்றி வருகின்றனர்.

## கட்டிட அமைப்பு

உயர்நிலைப் பள்ளி இரண்டு மாடி கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அலுவலகம் மற்றும் ஒரு வகுப்பு கீழ்த்தளத்திலும், பிற **5** வகுப்புகள் மேல் தளத்திலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களின் நெறிப்படுத்தலுக்காக ஒரு தனி அறையும் செயல்பட்டு வருகிறது.

## கல்வி சார் பெருந்திட்டம்

ஒவ்வொரு வகுப்பின் இறுதியிலும் ஒரு குழந்தை அடைய வேண்டிய முழுமையான திறன்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கல்விசார் பெருந்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு உதவக்கூடிய உடல் மற்றும் உளம் சார்ந்த திறன்கள், படைப்பாற்றல் வளர்ச்சி, மொழித்திறன், கணிதம் மற்றும் சுற்றுச்சூழல் அறிவு, தனிநபர் மற்றும் சமூகத் தொடர்பு திறன்கள், ஆங்கில அறிவு போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாக இந்த அக்காதமிக மாஸ்டர் பிளான் தயார் செய்யப்பட்டுள்ளது.

தாய்மொழியில் சரளமாகப் பேசவும் எழுதவும் செய்தல், பாடப்பகுதியை வாசித்து கருத்துக்களை உட்கொள்ளுதல், உட்கொண்ட கருத்துக்களை வரிசைப்படுத்திக் கூறுதல், கணிதத்தில் எண்ணறிவு, எண் விளக்கம், கூட்டல், கழித்தல் நடைமுறைப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் போன்ற கணிதத் திறன்களை உறுதிப்படுத்தலும் இதில் அடங்கும்.

சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்வுகளை உற்று நோக்கி தனித்தன்மைகளைக் கண்டடைதல், வகைப்படுத்துதல், முடிவுக்கு வருதல், தீர்வு காணுதல், சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் மனநிலையை உருவாக்குதல் எனும் படிகளையும் இந்த அகாடமிக மாஸ்டர் பிளான் முன்வைக்கிறது.

இரண்டாம் மொழியான ஆங்கில பாடப் பகுதியை வாசித்தல், சரளமாக ஆங்கிலத்தில் பதில் கூறுதல், சிறிய மொழிவெளியீட்டு வடிவங்களைப் படைத்தல் போன்றவையும் இதில் உட்படுத்தப்பட்டுள்ளது.

திட்டமிட்ட செயல்பாட்டு மண்டலங்கள்:

- மொழி வளர்ச்சி
- அறிவு வளர்ச்சி
- உடல் ரீதியான வளர்ச்சி
- சமூக, மனநிலை வளர்ச்சி
- படைப்பாற்றல் வளர்ச்சி

மொழி வளர்ச்சி :

கவனித்து கேட்கும் திறன், பேசும் திறன், சொற்களஞ்சியம் பெருக்குதல், வாசிப்பு முன் பயிற்சி ஆகியவற்றிற்கு உதவும் செயல்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்.

அறிவு வளர்ச்சி:

ஐம்புலன்களின் வளர்ச்சிக்கு உதவும் அனுபவங்களை அளித்து குழந்தையின் சிந்தனைகளைத் தூண்டச் செய்து அதன் வாயிலாக கருத்துருவாக்கம் நடைபெறச் செய்தல்.

உடல் வளர்ச்சி :

விளையாட்டுகள் நுண்தசை வளர்ச்சிக்கு உதவும் கற்றல் அனுபவங்களாக மட்டுமின்றி உடலில் உள்ள அனைத்துத் தசை, நரம்பு மண்டலங்களை ஒருங்கிணைக்க உதவும் விளையாட்டுகளும் உள்ளன. இவற்றுள் நாட்டுப்புற விளையாட்டுகளையும், அல்லாதவற்றையும் உட்படுத்தல்.

நுண்தசை வளர்ச்சி :

பல பொருட்களைக் கையால் கிழித்தும், கத்திரிக்கோலால் வெட்டியும் ஓரிகாமி வடிவங்கள் உருவாக்குதல்.

சமூக வளர்ச்சி :

தன்னம்பிக்கை, சுயமரியாதை, தனித்துவம் ஆகியவற்றை வளர்க்கவும், குழுவாக இணைந்து செயல்படவும் பிறருக்கு உதவுதல், பிறரோடு பரிவு ஆகியவற்றை வளர்த்தல்.

படைப்பாற்றல் :

படைப்பாற்றல் மற்றும் அழகுணர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த உதவும் செயல்பாடுகள் போன்றவற்றை உட்படுத்தல்.

நோக்கங்கள் :

- பாடப்பகுதியின் வாயிலாக புதிய சொற்கள், எழுத்துக்கள் போன்றவற்றை அடையாளம் காணுதல், அடையாளம் கண்ட எழுத்துக்களை பயன்படுத்தி புதிய சொற்கள், வாக்கியங்கள் போன்றவற்றை உருவாக்கி தமது கருத்தை வரிசைப்படுத்தி எழுதுதல்.
- குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் செயல்பாடுகளை வரிசைப்படுத்தி வழங்குதல், செய்முறைப் பயிற்சி, குழு விளையாட்டுகள், வயதிற்கு ஏற்ற உடல், உள வளர்ச்சியை எட்டக்கூடிய செயல்பாடுகளை வடிவமைத்து வழங்கல்.
- சிறிய கதைகள் கேட்டல், கதாபாத்திரங்களின் சிறப்புகளைக் கூறல், கதாபாத்திரங்களுக்கு இடையேயான உரையாடலை விரிவுபடுத்திக் கூறவும், எழுதவும் செய்தல், படக்கதைகளை சொந்த நடையில் கூறுதல் போன்றவற்றில் திறன்பெறச் செய்தல்.
- பாடல்களைக் கேட்டல், தனியாகவும் குழுவாகவும் பாடுதல், செய்கைப் பாடலாக பாடி நடித்தல், கூடுதல் வரிகள் சேர்த்துப் பாடலை நிறைவு செய்தல் போன்றவற்றில் திறன் பெறச் செய்தல்.
- சொல் அட்டைகள், வாக்கிய அட்டைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஒற்றெழுத்துக்கள், துணை எழுத்துக்கள் போன்றவற்றை அடையாளம் காண்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பள்ளிக் காலை கூட்டங்களில் செய்தி வாசித்தல், சொற்பொழிவு ஆற்றுதல், பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல் போன்றவற்றில் திறன் பெறச் செய்தல் .
- கதையை நாடகமாக மாற்றுதல், காட்சி அமைப்புகளுக்கு ஏற்றவாறு உரையாடல் எழுதுதல், குழுவாகச் சேர்ந்து நடித்துக் காட்டுதல் போன்றவற்றில் திறன் பெறச் செய்தல்.

- மாணவர்களின் வயதிற்கு ஏற்ற படைப்பாக்கச் செயல்பாடுகளில் பங்கெடுக்கச் செய்து படைப்புத்திறன் மிக்கவர்களாக மாற்றுதல்.
- மொழி வெளியீட்டு வடிவங்களின் படிப்படியான வளர்ச்சியைப் புரிந்து கொண்டு பாடப்பகுதியின் வாயிலாகவும், சுதந்திரச் சூழலிலும் மொழி வெளியீட்டு வடிவங்கள் வாயிலாகத் தம் கருத்துக்களை வெளியிடுவதற்கான திறன்.
- இலக்கணக் கூறுகள், மொழிக் கூறுகள் போன்றவற்றைப் புரிந்து கொண்டு அவற்றைத் தமது படைப்புகளில் பயன்படுத்துதல்.
- எண்களின் எண் அறிவு, எண் விளக்கம், சிறிய எண், பெரிய எண், முன்னால் பின்னால் வரும் எண், ஏறுவரிசை, இறங்கு வரிசை, கூட்டல், கழித்தல், சிறிய பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் போன்றவற்றில் திறன் பெறச் செய்தல்.
- சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்வுகளை உற்று நோக்கி தனித் தன்மைகளைக் கண்டடைதல், சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டடைந்து , பிரச்சினைகளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் மனநிலையை உருவாக்குதல், முடிவுக்கு வருதல், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல் உட்படச் சுற்றுச்சூழல் கல்வி தொடர்பான கருத்துக்களை உறுதிப்படுத்துதல்.
- இயற்கைக் காட்சிகள், மரங்கள், பறவைகள், பழங்கள், காய்கறிகள் பூந்தோட்டங்கள் போன்ற படங்களுக்கு வண்ணம் தீட்டுவதற்கான வாய்ப்புகளை வகுப்பறையில் வழங்குதல்.
- ஐம்புலன்களைப் பயன்படுத்தி உற்று நோக்கல், தனித்தன்மைகளை அறிதல் , வகைப்படுத்துதல், முடிவுக்கு வருதல் போன்ற கற்றல் அடைவுகளுக்கு ஏற்ற அறிவு உருவாக்க செயல்பாடுகள் தொடக்க நாட்களில் வழங்குதல்.
- கணித செயல்பாடுகளை எளிமையாக்கல் (கணித ஆய்வகம்).
- கணிதத்தை இனிமையாக்க ஜியோமித வடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பள்ளி வளாகத்தில் பூங்கா அமைத்தல்.
- அறிவியல் ஆய்வகம் அமைத்தல்.
- அறிவியல் மனநிலையை உருவாக்கல்.
- அறிவியல் பாடத்தை இனிமையாக்கல் (களப்பயணம்).

- ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கல்.
- விவசாயத்தை மீட்டெடுத்தல்.
- அறிவியல் உபகரணங்களை சுயமாகக் கையாளுதல்.
- சிறந்த உணவு முறை மற்றும் சுகாதாரம் பற்றிய மனநிலையை மாணவர்களிடம் உருவாக்குதல்.
- இரண்டாம் மொழியான ஆங்கில பாடப் பகுதியை வாசித்தல், சரளமாக ஆங்கிலத்தில் பதில் கூறுதல், சிறிய மொழி வெளியீட்டு வடிவங்களை படைத்தல் போன்ற திறன்களை உறுதிப்படுத்துதல்.
- ஆங்கிலத்தில் கருத்து பரிமாற்றம் நடத்துவதற்கான திறன் பெறுதல்.
- ஆங்கில இலக்கண இலக்கியங்களில் திறன் பெறுதல்.
- எளிய தமிழ் நூல்களை கருத்து மாறாமல் மொழி பெயர்த்து வெளியிடுதல்.
- இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் திறன் பெறுதல்.
- குழு விளையாட்டுகளில் ஈடுபடச் செய்து தலைமைப் பொறுப்பு, குழு மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மற்றும் சமூகத் தொடர்புத் திறன் மிக்கவர்களாக வளர அடித்தளம் அமைத்தல்.

மண்டலம் : **UP Tamil**

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| புதிய சொற்கள், எழுத்துக்கள் போன்றவற்றை அடையாளம் கண்டு வாக்கியங்கள் உருவாக்கி தமது கருத்தை வரிசைப்படுத்தி எழுதுதல். | வளரும் வாக்கியங்கள் என்னும் தலைப்பில் ஏராளம் வாய்ப்புகளை வகுப்பறையில் உருவாக்கி சொற்களை வரிசை மாற்றி வழங்கி சரியான வாக்கிய அமைப்பை உருவாக்க வாய்ப்பளித்தல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழாசிரியர் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| செய்முறை பயிற்சி, குழு விளையாட்டுகள் வழங்கி உடல், உள வளர்ச்சியை உறுதிப்படுத்துதல். | எளிய யோகா, ஏரோபிக்ஸ், பலவித விளையாட்டுகள் வழங்கி பயிற்சிகளில் பங்கெடுக்க வாய்ப்பளித்தல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழாசிரியர் | **PTA** |
| கதைகள் கேட்டு கதாபாத்திரங்களின் சிறப்புகள் கூறி உரையாடலை விரிவுபடுத்தி, சொந்த நடையில் எழுத, கூற திறன் பெறச் செய்தல். | சிறிய கதைகளை நாடகமாக மாற்றவும், நடித்துக் காட்டவும் வகுப்பறையில் வாய்ப்பு வழங்கி, ஒரு நிகழ்வை நாடகமாக வடிவமைக்க வாய்ப்பளித்தல். | **3** மாதங்கள் | தமிழாசிரியர், இலக்கிய மன்றம் | **PTA** |
| பாடல்களைத் தனியாகவும், குழுவாகவும் பாடுதல், பாடி நடித்தல் போன்ற திறன் பெறச் செய்தல். | பள்ளி விழாக்கள், தினக் கொண்டாட்டங்களின் போது கவிதை மொழிதல், காட்சிப்படுத்துதல் போன்றவற்றை வழங்க வாய்ப்பளித்தல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழாசிரியர், இலக்கிய மன்றம், மாணவர்கள் | **PTA** |
| செய்தி வாசிப்பு, சொற்பொழிவாற்றல், கவிதை பாடுதல், பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல் போன்றவற்றில் திறன் பெற செய்தல். | பள்ளி காலைக் கூட்டங்கள், பள்ளி விழாக்களின் போது தலைமை தாங்குதல், சொற்பொழிவாற்றுதல், கவிதை மொழிதல் போன்ற வாய்ப்புகளை வழங்கி மாணவர்களின் படைப்பாற்றலை வளரச் செய்தல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழாசிரியர், இலக்கிய மன்றம், மாணவர்கள் | **PTA** |
| குழுச் செயல்பாடுகளில் ஈடுபடச் செய்து சமூகத் தொடர்பு திறன் மிக்கவர்களாக வளர அடித்தளம் அமைத்தல். | குழந்தையின் சமூக அனுபவத்தோடு தொடர்புடைய ரோல் ப்ளே, முகநடிப்பு போன்ற வாய்ப்புகளை வகுப்பறையில் | கல்வியாண்டு முழுவதும் | தமிழாசிரியர், இலக்கிய மன்றம், மாணவர்கள் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| | உருவாக்கி அனைத்து குழந்தைகளின் பங்களிப்பையும் உறுதிப்படுத்துதல். | | | |

மண்டலம் : **HS Tamil**

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| **8, 9, 10** ஆகிய வகுப்புகளில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் அனைத்து வகையான செயல்பாட்டு வடிவங்களையும் முழுமையாக தெரிந்து கொள்ளுதல் | அனைத்து வகையான குறிப்புகள், கட்டுரைகள், கடித வடிவங்கள், துண்டு பிரசுரம், தலையங்கம், விமர்சனம், தன்விவரப் பட்டியல், வாழ்க்கை குறிப்பு போன்ற செயல்பாட்டு வடிவங்களைப் பயிற்சி செய்தல், **8, 9, 10** ஆகிய மூன்று வகுப்புகளிலும் ஒரு பிரிவேளை வீதம் ஒதுக்கி செயல்பாடுகளை எழுத பயிற்சி வழங்குதல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழ் ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் | |
| தமிழ் மன்றம் நிறுவுதல். | தமிழ் மொழிப் பற்றையும், திறனையும், படைப்பாற்றலையும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மன்றம் நிறுவுதல். | ஜூன் **2025** | தமிழ் ஆசிரியர், மாணவர்கள் | |
| அவையில் பேசவும் கருத்துக்களைப் பகிரவும் தேவையான திறன்களை வளர்த்தல். | • பள்ளிக் காலைக் கூட்டங்கள் நடத்துதல்.<br>• மாதம் ஒருமுறை இலக்கிய மன்ற கூட்டங்கள் நடத்துதல்.<br>• பள்ளி கலை விழாக்கள் தமிழ்ச்சங்க போட்டிகள் போன்றவற்றில் பங்கேற்க பயிற்சி வழங்குதல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழ் ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| பெரியோர்களையும் எழுத்தாளர்களையும் பேட்டி காணும் திறன் வளர்த்தல் | • தமிழ் எழுத்தாளர்களைப் பள்ளியில் வரச் செய்து மாணவர்களிடம் கலந்துரையாடும் வாய்ப்பு ஏற்படுத்துதல்.<br>• நேர்காணல் நடத்துதல். | முதல் பருவம் | தமிழ் ஆசிரியர், மாணவர்கள் | **PTA** |
| இயற்கை விழிப்புணர்வு செயல்பாடுகளில் ஈடுபடுதல். | • பள்ளி காலைக் கூட்டங்கள் நடத்துதல்.<br>• கூட்டத்தில் உறுதிமொழி ஏற்க செய்தல்.<br>• விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.<br>• வகுப்பறைகளையும் பள்ளி வளாகத்தையும் சுத்தமாக பராமரித்தல்.<br>• செடிகளையும் மரக்கன்றுகளை நடச்செய்தல் பராமரிக்கச் செய்தல். | கல்வியாண்டு முழுவதும் | பசுமை மன்றம், தமிழ் ஆசிரியர், மாணவர்கள் | **PTA** |
| மாணவர்களின் படைப்பாற்றல் திறன்களை வளர்த்தல்.<br>இதழ் வெளியிடுதல். | அனைத்து வகுப்புகளிலும் எழுத்தாற்றல் திறன் கொண்ட மாணவர்களையும், ஓவியத்திறன் கொண்ட மாணவர்களையும் தங்கள் படைப்புகளை எழுதித் தர செய்தல். மாணவர்களின் படைப்புகளை தொகுத்து ஆண்டு மலர் வெளியிடுதல். | கல்வியாண்டு முழுவதும் | தமிழ் இலக்கிய மன்றம் | ஆசிரியர், மாணவர் கள் |
| போதைக்கு எதிரான விழிப்புணர்வுச் செயல்பாடுகளில் ஈடுபடுதல். | • பள்ளி காலைக் கூட்டத்தில் உறுதிமொழி எடுத்தல்.<br>• சூம்பா பயிற்சிகள் நடத்துதல்.<br>• விளையாட்டுப் போட்டிகளை நடத்தி விளையாட்டில் | கல்வியாண்டு முழுவதும் | தமிழ் ஆசிரியர், மாணவர்கள் | பள்ளிக் கூட நிர்வாகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| களப்பயணம் | மாணவர்களை ஈடுபடுத்துதல்.<br>• போதை விழிப்புணர்வு பேரணிகள் நடத்துதல்.<br><br>பாடப் பகுதிகளோடு தொடர்புடைய இடங்களுக்கு களப்பயணம் மேற்கொள்ளுதல். | ஜூன், அக்டோபர் 2025 | தமிழ் ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் | ஆசிரியர், மாணவர் கள் |

மண்டலம் : UP/HS ஆங்கிலம்

| Aim | Activities | Month | Responsible Person | Economic Source |
|---|---|---|---|---|
| **To encourage Listening & Speaking**<br>**Introduce different genres (fiction, non-fiction, poetry) Enhance vocabulary.**<br>**Enhance listening skills.** | **Interactive storytelling sessions discussing themes, characters and plots to enhance listening skills.**<br><br>**Group discussions and role-plays to improve speaking skills.**<br><br>**Vocabulary games and exercises to build word knowledge.** | **June** | **English Teacher** | **English Club** |
| **To encourage <u>Reading</u>**<br>**Develop basic reading, writing , listening and speaking skills.**<br>**Cultivate effective communication skills for various contexts.** | **Interactive Reading Circles:**<br>**Divide students into small groups and provide them with age - appropriate texts, such as short stories or excerpts from novels.**<br>**Each group reads the assigned text together and discusses key elements like plot, characters and themes.**<br>**Encourage students to take turns reading aloud and share their interpretations and** | **July** | **English Teacher** | **English Club** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **reactions to the text.**<br>**After discussions, each group presents a summary or analysis of their assigned text to the class.**<br>**Guided reading sessions with the comprehension questions.**<br>**Listening comprehension exercises using audio stories.**<br>**Debates and presentations for advanced speaking practice.**<br>**Expanding vocabulary with context clues from passage.** | **August-December** | **English Teacher** | **English Club** |
| **To develop Writing skills**<br>**Introduce grammatical concepts such as parts of speech, tenses and sentence structure.**<br>**To develop basic grammar rules. Focus on sentence structure, punctuation and grammar.**<br>**Expand vocabulary through reading and interactive activities.**<br>**Introduce different types of writing : narrative, descriptive, persuasive etc.** | **Improve sentence structure.**<br>**Practice for simple creative writing tasks like descriptive paragraphs, short stories and simple poetry.**<br>**Projects and Research assignments to foster critical thinking.**<br>**Focus on developing paragraphs and essays. Teach persuasive writing techniques and argumentation.**<br>**Preparing and delivering speeches. Listening to and analysing different media sources.**<br>**Interactive grammar games.**<br>**Structured grammar lessons with examples and practice exercises.**<br>**Worksheets on parts of speech, punctuation and sentence types.** | **January-February** | | **English Club** |

| | | | | |
|---|---|---|---|---|
| Language games, puzzles and activities.<br><br>Differentiation and support : | Integrate language games and activities to reinforce vocabulary, grammar and language skills in an engaging way,<br>For example, play word association games charades or vocabulary bingo to practice new words and concepts.<br>To create their own poems, stories, dictionary etc. and present it to the class.<br>Recognise and accommodate the diverse learning needs of students through differentiated instruction, including accommodations and modifications for specially abled students and gifted learners.<br>Provide additional support and resources such as small- group instruction, tutoring, peer mentoring and remedial programs to help struggling students and challenge advanced learners.<br>Offer opportunities for enrichment and extension activities to extend learning beyond the core curriculum and cater to students' interests and strenghts.<br>Collaborate with learning support specialists, language teachers and other support staff to ensure inclusive practices and provide targeted support for students with specific learning needs.<br>Design a range of assessment | Through out the year | English Teacher | English Club |

| | | | | |
|---|---|---|---|---|
| **Assessment and feedback:** | **tasks and the tools to measure students' language proficiency, comprehension and writing skills including formative and summative assessments.**<br><br>**Use a variety of assessment methods such as quizzes, tests,essays, presentations, projects and performance tasks to asses different aspects of language learning.**<br><br>**Provide timely and constructive feedback to students that highlights their strenghts, identifies area for improvement and suggests strategies for further development.**<br><br>**Involve students in self-assessment and reflection activities to promote ownership of their learning process.**<br><br>**Use assessment data to inform instructional planning, identify learning gaps and differentiate instruction to meet individual student needs.** | **Through out the year** | **English Teacher** | **English Club** |
| **Parent Involvement** | **Provide resources and tips for parents on how to support their child's literacy development at home, including book recommendations, reading strategies and language enrichment activities.**<br><br>**Showcase students' and parents' writing through publications, newsletters, or school- wide writing anthologies to celebrate their achievements and foster a** | **Through out the** | **English** | **English Club** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **culture of writing.**<br>**Encourage parents with expertise in English language teaching, literacy or language acquisition to share their knowledge and skills with the students and teachers.**<br>**Collaborate with parents to create English language learning materials, such as flashcards, games or resource packs, that can be used in the classroom or sent home for additional practice.** | **year** | **Teacher** | |

മണ്ഡലം : UP/HS Hindi

| ലക്ഷ്യം | പ്രവർത്തനങ്ങൾ | കാലം | ചുമതല | സാമ്പത്തികം |
|---|---|---|---|---|
| അക്ഷരബോധം ഉറപ്പിക്കൽ. | പദ്യങ്ങൾ ചൊല്ലി അതിൽ വരുന്ന പുതിയ പദങ്ങൾ അക്ഷരങ്ങൾ എന്നിവ മനസ്സിലാക്കി കൊടുത്തു പഠിപ്പിക്കും.<br>ചിത്രങ്ങൾ, അക്ഷരമാല ചാർട്ട് എന്നിവ ഉപയോഗിക്കും.<br>ഭിന്നശേഷിക്കാർ പഠന വൈകല്യമുള്ള കുട്ടികൾ എന്നിവർക്കായി വിവിധ വർണ്ണത്തിലുള്ള അക്ഷരമാല ചാർത്തി അവതരണം. | ജൂൺ മുതൽ ഫെബ്രുവരി വരെ | ഹിന്ദി അധ്യാപകർ | |
| ഹിന്ദി വായന | തെറ്റ് കൂടാതെ ഹിന്ദി വായിക്കാനുള്ള പരിശ്രമം ചെയ്യാം.<br>നിരന്തരം പുസ്തകം വായിച്ച് കേൾപ്പിച്ച് വായനയിലേക്ക് ആകർഷിക്കാം.<br>ഹിന്ദിയിൽ എണ്ണം, ആഴ്ച, മാസം എന്നിവയുടെ ദൈനംദിന അവതരണം. | ജൂൺ മുതൽ ഫെബ്രുവരി വരെ | ഹിന്ദി അധ്യാപകർ | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ഹിന്ദിയിലുള്ള ഡയറിക്കുറിപ്പുകൾ, ജീവനികൾ, കവിതകൾ, കഥകൾ എന്നിവ വായിക്കുക. | | | |
| ഹിന്ദി സംഭാഷണം | ഹിന്ദിയിൽ സംസാരിക്കാനുള്ള അവസരങ്ങൾ നൽകാം (ദൈനംദിന ക്ലാസ് റൂം സംസാരങ്ങൾ, ഗ്രൂപ്പ് ചർച്ചകൾ)<br>റോൾപ്ലേ, സ്കിറ്റുകൾ എന്നിവ സംഘടിപ്പിക്കുക.<br>ഹിന്ദി പ്രസംഗങ്ങൾക്ക് അവസരം നൽകുക.<br>നിത്യജീവിതത്തിൽ ആവശ്യം വരുന്നത് ഹിന്ദിയിൽ സംസാരിക്കാൻ പരിശീലിപ്പിക്കാം.<br>പാഠഭാഗവുമായി ബന്ധപ്പെട്ട ഓഡിയോ കേൾപ്പിക്കുക. | ജൂൺ മുതൽ ഫെബ്രുവരി വരെ | ഹിന്ദി അധ്യാപകർ | |
| സാഹിത്യ അഭിരുചി വളർത്തുക. | കലോത്സവത്തിൽ കുട്ടിയുടെ മികച്ച പങ്കാളിത്തം ഉറപ്പുവരുത്തുന്നു.<br>പദ്യം ചൊല്ലൽ, പോസ്റ്റർ നിർമ്മാണം എന്നിവ സംഘടിപ്പിക്കുന്നു.<br>ഹിന്ദി പത്രിക തയ്യാറാക്കുക. | ജൂൺ മുതൽ ഫെബ്രുവരി വരെ | ഹിന്ദി അധ്യാപകർ | |
| ആധുനിക സാങ്കേതികവിദ്യ സാധ്യതകളെ പ്രയോജനപ്പെടുത്തുക | ഹിന്ദി കമ്പ്യൂട്ടിംഗ് പഠിപ്പിക്കുക.<br>AI ഉപയോഗിച്ച് ഭാഷാ പഠനം എളുപ്പത്തിൽ ആക്കാനുള്ള പ്രവർത്തനങ്ങൾ. | ജൂൺ മുതൽ ഫെബ്രുവരി വരെ | ഹിന്ദി അധ്യാപകർ | |

மண்டலம் : UP அடிப்படை அறிவியல்

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| எளிய சோதனைகள் செய்து அறிவியலோடு ஒன்றிணைதல். | அறிவியல் அறிவை அதிகப்படுத்துவதற்காகவும், அறிவியலில் உன்னத நிலையை அடையவும், அதிகமான எளிய சோதனைகளை ஒவ்வொரு மாதமும் நடத்தி மாணவர்களை அறிவியலோடு ஒன்றிணைய வைத்தல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |
| அறிவியல் களப்பயணம் மேற்கொண்டு உற்றுப் பார்க்கும் வாய்ப்பளித்து அறிவியல் மனப்பான்மையை அதிகரிக்கச் செய்தல். | அறிவியல் கண்காட்சி, மருத்துவ கண்காட்சி மற்றும் அறிவியல் தொடர்பான பல்வேறு கண்காட்சிகளைக் காண களப்பயணம் மேற்கொண்டு உற்று பார்க்க வாய்ப்பளித்து, அறிவியல் மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்த்தல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |
| உடல் நல பரிசோதனைகள் நடத்தி மாணவர்களின் உடல் நலனை மேம்படுத்துதல். | மாணவர்களிடம் நல்ல சுகாதார பழக்கங்களை ஏற்படுத்தவும், உடல் ஆரோக்கியத்தை சமநிலையாக வைத்திருக்கவும், ஒவ்வொரு மாதமும் EMI கண்டுபிடித்து, அவர்களின் உடல் எடையை பரிசோதித்து உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |
| சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தி சுகாதாரத்தை மேம்படுத்துதல். | சுகாதாரமும், நோய் எதிர்ப்பு சக்தியும் தொடர்பான விழிப்புணர்வு வகுப்புகள் நடத்துதல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| காய்கறித் தோட்டம் அமைத்து விவசாயத்தின் மேன்மையை அறியச் செய்தல். | பள்ளிக்கூட வளாகத்தில் எளிய காய்கறித் தோட்டம் அமைத்து விவசாயத்தோடு மாணவர்களை ஒன்றிணைத்தல்.விவசாயத்தோடு தொடர்புடைய பல்வேறு கட்டங்களை கடந்து செல்லும் போது மாணவர்கள் அதை உற்றுப் பார்க்கும் வாய்ப்பளித்து, உற்று நோக்கல் குறிப்புகள் எழுத வாய்ப்பளித்தல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |
| ஊட்டச்சத்து நிகழ்வுகள் நடத்தி மாணவர்கள் ஆரோக்கிய மேம்படுத்துதல். | வாரந்தோறும் அவர்கள் எடுத்துக்யொண்ட  உணவுகளின் அட்டவணை தயார் செய்தல்,கலந்துரையாடல்கள், விழிப்புணர்வு வகுப்புகள் போன்றவற்றை நடத்துவதன் வாயிலாக சத்து நிறைந்த உணவுப் பொருட்களைக் குறித்தும், ஆரோக்கியத்தைக் குறித்த மனப்பான்மையையும் மாணவர்களிடம் உருவாக்கல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |
| பாவ நாடகம் மூலம் சுகாதார மனநிலையை உருவாக்கல். | சிறந்த உணவு முறை மற்றும் சுகாதாரம் பற்றிய மனநிலை உருவாக பொம்மலாட்டம் நடத்துதல். | கல்வி யாண்டு முழுவதும் | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | **PTA** |

மண்டலம் **: HS** அறிவியல்

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| அறிவியல் உலகத்தை நோக்கி அறிவியல் மனப்பான்மையையும் | வகுப்புகளில் கருத்தரங்கம் கொடுத்து நிகழ்ச்சிகளில் நடத்த செய்தல். | கல்வியாண்டு முழுவதும் | அறிவியல் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| நிரந்தரமாக விசாரணை நடத்தி கிடைத்த தகவல்களை பகுத்தறிந்து விமர்சனம் செய்து முடிவை அடையும் திறனையும் அடைதல். | ஒரு வருடத்தில் இரண்டு முறை மாணவர்கள் தயாரித்த பொருட்களை கண்காட்சி நடத்துதல்.<br>LED தயாரித்தல், லோஷன் தயாரித்தல் போன்ற பட்டறைகள் நடத்துதல். | வருடத்தில் இரண்டு முறை<br>வருடம் ஒருமுறை | ஆசிரியர், அறிவியல் மன்றம் | |
| அறிவியல் கண்ணோட்டத்தின் வழியாக ஆர்வம் மற்றும் உற்று நோக்கல் திறனை வளர்த்தல். | எளிய சோதனைகளையும் மாடல்களையும் ஆசிரியரின் மேற்பார்வையோடு செய்தல்.<br>பாடத்தோடு தொடர்புடைய சோதனைக்குத் தேவையான பொருட்களின் கண்காட்சி வைத்தல்.<br>சிறிய தரத்தில் உள்ள செயல் திட்டம் செய்து அதை பள்ளி விழாக்களில் நடத்துதல். | வருடம் ஒருமுறை<br>வருடம் இருமுறை | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | அறிவியல் மன்றம் |
| தொழில்நுட்பக் கல்வி உலகம் மனித நேயத்தை குழுமனப்பான்மையை வளர்க்கும் அறிவியல் மனப்பான்மை. | வகுப்பறைகளில் அறிவியல் நூலகம், அறிவியல் மூலை உருவாக்குதல்.<br>அறிவியல் ஆய்வகத்தை பயன்படுத்தும் முறையில் நவீன மயமாக்குதல். | கல்வியாண்டு முழுவதும்<br>வருடம் இருமுறை | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | PTA |
| ஆயுர்வேதம், சுற்றுச்சூழல், நட்பு மனப்பான்மை போன்றவற்றை வளர்த்தல். | குழந்தைகளின் ஆரோக்கிய குறிப்புகளை பதிவுகளாக்கி வைத்தல். | வருடம் ஒருமுறை | அறிவியல் ஆசிரியர், அறிவியல் மன்றம் | அறிவியல் மன்றம் |

மண்டலம் : **UP** கணிதம்

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| எண்ணறிவை வளர்த்தல். | கணிதத்தின் அடிப்படை செயல்களை செயல்களான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்றவற்றை உட்படுத்தி முன்னறிவை சேகரிப்பதற்காக சில செயல்பாடுகளை கொடுத்தல். பின் அவர்களின் தரத்திற்கு ஏற்ப அதிகமான செயல்பாடுகளை கொடுத்தல். **Worksheet, ICT** போன்றவை கொடுத்தல். கண்காட்சி அமைத்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| இடமதிப்பின் அடிப்படையில் எண்களை வாசித்தல், பிரித்து எழுத வைத்தல். | இடமதிப்பை அறிய அபாக்கஸ், இட மதிப்பு பெட்டி போன்ற பல்வேறு உபகரணங்களைக் கொண்டு பெரிய எண்களையும், இடமதிப்பு மாறாமல் வாசிக்கவும், அவற்றை பல்வேறு விதமாக பிரித்து எழுதும்படியான செயல்பாடுகளைக் கொடுத்தல். எழுத்தால் எழுதவும் வைத்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| பெரிய எண்களின் பெரியது, சிறியது , முன்னி, பின்னி போன்றவற்றை புரிந்து கொள்ளுதல். | பத்திலக்க எண் வரையுள்ள எண்களில் பெரியது சிறியது, முன்னர் உள்ள எண், அடுத்த எண், விடுபட்ட எண் என எல்லா எண்களையும் திறம்பட கையாளும் முறையிலான செயல்பாடுகளைக் கொடுத்தல். **Worksheet** கொடுத்தல்.<br><br>மாணவர்களை வைத்து பலவிதமான எண் அட்டைகளை செய்ய வைத்தல். கண்காட்சி அமைத்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| கோணங்களைத் துல்லியமாகவும் தெளிவாகவும் வரைய வைத்தல். | மாணவர்களிடம் வடிவியல் பெட்டியில் உள்ள அளவுகோல், செங்கோணமானிகள் ,கோணமானிகள் போன்றவற்றின் மாதிரிகளை செய்ய வைத்தல். (சார்ட், கட்டியான அட்டை போன்றவற்றை பயன்படுத்தி)<br>மேற்குறிப்பிட்ட உபகரணங்களின் பயன்களையும் அறிந்து கொள்ளுதல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| கோணங்களின் வகைகளை அறிதல். | கோணமானியில் **1°** முதல் **180°** வரையிலான அளவுகளில் அளந்து வரைய முடியும் என்று உறுதிப்படுத்தும் செயல்பாடுகளைக் கொடுத்தல். குறுங்கோணம், செங்கோணம், விரிகோணம் போன்ற கோணங்களையும் அவற்றின் கோண அளவுகளான **>90° , 90° , <90°** , போன்றவற்றை துல்லியமாக கணக்கிடும் செயல்பாடுகளை கொடுத்தல்.<br>கோண அளவுகளை சரியான முறையில் பயன்படுத்தும் வாய்ப்புகள் அளித்தல். **(Worksheet)**<br>மாணவர்கள் தயாரித்த **Worksheet,** மாதிரிகள் போன்றவற்றை கண்காட்சியாக வைத்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| பின்ன எண்களின் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் செயல்பாடுகளை கையாளும் திறன் வளர்த்தல். | ஒரு பொருளை பல பாகங்களாக பிரிக்க வைத்தல். கணித ஆய்வகம் பயன்படுத்தல். தானாகவே வட்டம், சதுரம் போன்றவற்றை சார்ட் அல்லது அட்டையில் வெட்டி எடுத்து பல | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாகங்களாக பங்கு வைத்தல்.<br>வெட்டிய பாகங்களை சேர்த்தும், நீக்கியும் பின்ன எண்களின் கூட்டல் கழித்தலை உறுதிப்படுத்துதல்.<br>பல எடையுள்ள மண்நிரப்பிய பொட்டலங்களில் பலவற்றை ஒன்று சேர்த்து பெருக்கலை உறுதிப்படுத்தல்.<br>பால், அரிசி பங்கு வைத்தலை பார்வையிட்டு வகுத்தல் செயல்பாடுகள் உறுதிப்படுத்தல். **Worksheet** பயன்படுத்தல். கண்காட்சி நடத்துதல். | | | |
| வடிவியல் வடிவங்கள் வரைவதில் ஆர்வத்தை வளர்த்தல். | வடிவியல் வடிவங்கள், மாதிரிகள் செய்தல், சுற்றியுள்ள வடிவங்கள் கண்டுபிடித்து வேறுபடுத்தல். **Pattern** தயாரித்தல்.<br>**ICT** உபயோகித்தல்,**Magazine** தயாரித்தல். கண்காட்சி நடத்தல். **Worksheet** கொடுத்தல். சதுரம், செவ்வகம் வரைந்த **Worksheet.** | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| பரப்பளவு, கன அளவு போன்றவற்றை கண்டுபிடிக்கும் திறன் வளர்த்தல். | மாணவர்கள் **pencil,scale** கொண்டு ஒரு சென்டிமீட்டர் இடைவெளியில் நேராகவும் செங்குத்தாகவும் கோடுகள் வரைதல். சிறிய சதுரங்களை எண்ணி பரப்பளவு கண்டுபிடிக்கக் கூறல். வாய்ப்பாடு வைத்தும் கண்டுபிடிக்கும் திறனை உறுதிப்படுத்தல்.<br>கணித ஆய்வகத்தில் கன செவ்வக அட்டையை அளந்து கன அளவு கண்டுபிடிக்கும் முறையை பின்பற்றுகின்றனர். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| | அட்டைகளினால் கன செவ்வக கட்டை, செவ்வக கட்டைகள் செய்தல். கணித ஆய்வகம் பயன்படுத்தல்.<br><br>பல அளவுகள் கொடுத்து சார்ட் பேப்பரினால் கன செவ்வகம் செய்தல். **Workshop** வைத்தல். | | | |
| மடங்குகள், காரணிகள் என்ற கருத்தை உறுதிப்படுத்தல். | கணித விளையாட்டு (முத்துகள்), புதிர் கணக்குகள் சேகரித்தல். கணித ஆய்வகம் பயன்படுத்தி ஆர்வத்துடன் மடங்குகள், காரணிகள் போன்றவற்றை கண்டுபிடித்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | PTA |
| முக்கோணம் போன்ற வடிவங்களை துல்லியமாக வரைதல். | கொடுக்கப்படும் அளவில் காம்பஸ், கோணமானி போன்றவற்றை பயன்படுத்தி முக்கோணம் வரையச் செய்தல். **Worksheet** பயன்படுத்தல். ICT பயன்படுத்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | PTA |
| எண்களை பலவாறாக பிரித்து எழுதுதல் பங்கு வைத்தல் | முத்துகள், சிறுகற்கள் போன்றவற்றை பயன்படுத்தி பல விதமாக ஒன்று போல் பங்கு வைத்தல். இதன் மூலம் எண்களையும் பங்கு வைத்து வகுத்தல் என்ற கருத்தை உறுதிப்படுத்துதல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | PTA |

மண்டலம் : **HS** கணிதம்

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| கருத்துக்களை உட்கொள்ளுதல். | ஒப்போடு ஒப்போடு இணைந்து முன் தேர்வு நடத்தி பட்டியலை தயாரித்தல்.<br>கணித மருத்துவமனை. | ஜூன் மாதத்தின் முதல் வாரம் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| கட்டுமானத்தில் திறனை அடைதல். | கருவிப் பெட்டிகள், பட்டறைகள். | ஜூன் மாதத்தின் இரண்டாவது வாரம் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| கணிதத்தை அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபடுத்துதல் மற்றும் கருத்துக்களின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுதல். | ஒரு கணித பயணத்தை ஏற்படுத்துதல். | கல்வி யாண்டில் ஒன்று | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| கணித கருத்துகளிலிருந்து எழும் கணித வடிவங்கள் மற்றும் அளவுகளுடன் அறிமுகம். | பட்டறைகள் நடத்துதல் மற்றும் கணித சங்கம் ஒருங்கமைத்தல். | கல்வி யாண்டில் ஒன்று | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| குழு மனப்பான்மை. | குழு ஆய்வு. | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| ஆசிரியர்கள் காலத்திற்கு ஏற்ப சிறு வகுப்பில் இருந்து தொடர்ந்து வரக்கூடிய கல்வி கொடுத்து மாணவர்களின் அடிப்படை கருத்துக்களை உறுதிப்படுத்துதல். | பாடக்குழுவின் சிறந்த பணி தொடர்பு விவாதங்கள் மற்றும் பாடத்திட்டமிடல் உள்ளிட்ட கூட்டு நடவடிக்கை மூலம் இலக்கு அடையப்படுகிறது. | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| கணித பாடத்தில் இருந்து மாணவர்களை சிறந்த கற்பனையாளர்கள் ஆக்குவது. | கணித கிராமம் – அருகில் உள்ள பகுதிகளை சேர்ந்த குழந்தைகள் மற்றும் கணித ஆசிரியர்களின் சமூகம். | விடுமுறை நாட்களில் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| கணிதப் போட்டி, கண்காட்சி போன்றவற்றில் ஆற்றல் திறனை அடைதல். | கணித குழுவின் செயல்பாடுகளை மேம்படுத்துதல், ஒரு நபருக்கு உதவுதல். | மாதத்தில் ஒன்று | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| கணித ஆய்வகம். | ஆய்வகத்திற்கு தேவையான கற்றல் பொருட்களை பட்டறைகள் மூலம் சேகரித்தல். | மேய் மற்றும் ஜூன் மாதம் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |
| பெற்றோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தல். | மாதத்தில் ஒருமுறை **PTA** நடத்த ஏற்பாடுகள் செய்தல். | ஒவ்வொரு மாதமும் | ஆசிரியர், கணித மன்றம் | **PTA** |

மண்டலம் **: UP** சமூக அறிவியல்

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| படைப்புகளின் வாயிலாக மாணவர்களின் படைப்பாற்றலை வளர்த்தல். | வகுப்புகளில் நடைபெறும் செயல்பாடுகளின் படைப்புகளை (நிலப்படங்கள், சிறப்பிதழ்கள், சுவர் பத்திரிகைகள் **etc.....)** பாதுகாத்து வைத்தலும், பின்னர் உண்டாகும் செயல்பாடுகளுக்குப் பார்வை நூலாக பயன்படுத்தலும், தொடர்ந்து தேவைப்பட்டால் காட்சிப்படுத்தவும் செய்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| கருத்துக்களைத் தொகுத்து வெளியிடுவதன் வாயிலாக மாணவர்களின் அறிவை வளரச் செய்தல். | மாதத்தில் ஒருமுறை கலந்துரையாடல் தலைப்பு கொடுக்கப்பட்டு குழு கருந்துரையாடல் நடத்தல். இறுதியில் அத்தலைப்பின் கீழ் கருத்துக்களை ஒரு நபர் தொகுத்து வழங்குதல். (கருத்துகள் சேகரிக்க வாய்ப்பளித்தல்). | | ஆசிரியர், சமுக அறிவியல் மன்றம் | **PTA** |

| | | | | |
|---|---|---|---|---|
| நிலப் படத்தை உற்று நோக்கி நாடுகள் மாநிலங்கள் மாவட்டங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ளுதல். | உலக வரைபடம், இந்திய வரைபடம், கேரள வரைபடம் போன்றவற்றைக் கொடுத்து நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்கள் போன்றவற்றைக் கண்டறியச் செய்தல். | கல்வியாண்டு முழுவதும் | ஆசிரியர், சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| பள்ளி வரலாறு அறிந்து கொள்தல். | பள்ளியில் உள்ள மாணவர், ஆசிரியர் பெயர்கள் மற்றும் இட வரலாறு போன்றவற்றை பிறரிடம் கேட்டு எழுதுதல். | குறிப்பிட்ட நாட்கள் | ஆசிரியர், சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| தேர்தல் முறைகளை அறிந்து கொள்ளுதல் | உள்ளாட்சி, சட்டமன்றம், பாராளுமன்ற தேர்தல் முறைகளையும், உறுப்பினர்களை தேர்வு செய்யும் முறைகளையும் அறிந்து கொள்ளுதல். | குறிப்பிட்ட நாட்கள் | ஆசிரியர், சமுக அறிவியல் மன்றம் | **PTA** |

மண்டலம் : **HS** சமுக அறிவியல்

| இலக்குகள் | செயல்பாடுகள் | காலம் | பொறுப்பு | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| மாணவர்களிடம் வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் வாயிலாக சிறந்த எதிர்காலத்தை உருவாக்குதல் . | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு களப்பயணம் மேற்கொள்ளுதல். | கல்வி யாண்டு முழுவதம் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| ஜனாதிபத்தியத்தை வாழ்க்கை ஒரு பகுதியாக மாற்றி அமைத்து குடிமகனுணர்வு, சமூக உணர்வு போன்ற கண்ணோட்டத்தை வளர்த்துதல். | பள்ளி பாராளுமன்றம், மோக் பாராளுமன்றம், குடிமகனுணர்வு, சமூக உணர்வு போன்றவை வளர்த்துவதற்கான செயல்பாடுகளை நடத்துதல். | குறிப்பிட்ட நாட்கள் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் அமைவிடத்தைப் புரிந்து | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| அமைவிடத்தைப் புரிந்து கொள்தல். மாணவர்களிடம் வரைபடத் திறனை வளர்த்துதல். | கொண்டு நிலப்படத்தில் அடையாளப்படுத்தி நிலப்படத் தொகுப்பு தயாரித்தல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| நமது கலாச்சாரம் பண்பாடு வரலாறு போன்றவற்றோடு மனப்பான்மை வளர்த்துதல். | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சந்தித்து தகவல்களை திரட்டி பகுப்பாய்வு செய்து அறிக்கை தயார் செய்தல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| நமது நாட்டின் பல்வகையான இயற்கையமைப்பை புரிந்து கொள்ளுதல். | வரலாற்று நிகழ்வுகள், இடங்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய படங்களை சேகரித்து படத்தொகுப்பு தயார் செய்தல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| மாணவர்களின் பொது அறிவு திறனை வளர்த்துதல். | பல்வேறு இடங்களில் காணப்படும் மண், நீர்நிலைகள், காற்று பெருங்கடல்கள் மற்றும் மலைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்தல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| தினசரி சமூக வாழ்க்கையில் நபர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை தகுந்த முறையில் எதிரகொள்ள உதவும் விதமான செயல்களை நடைமுறைப்படுத்துதல். | மாணவர்களிடம் சமூக அறிவியல் தொடர்பான பொது அறிவுத் திறனை வளர்த்தும்விதமான வினாடி வினா போன்ற செயல்பாடுகள் நடத்துதல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| சமூக அறிவியலில் ஆய்வு திறன் மற்றும் உற்றுநோக்கல் திறனை வளர்த்துதல். | சமூக அறிவியல் ஆய்வகம் தயார் செய்தல். ஆகிய காட்சிகள், புவியியல் ஆராய்ச்சி போன்றவற்றை வளர்த்தக்கூடிய செயல்களை நடைமுறைப்படுத்துதல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | **PTA** |
| வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மற்றும் நபர்கள் குறித்த | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் மற்றும் நிகழ்வுகளோடு தொடர்புடைய நாட்களில் வினாடி | கல்வி | ஆசிரியர்,சமுக | |

| | | | | |
|---|---|---|---|---|
| அறிவை வளர்த்துதல். | வினா, நேர்காணல், விவாதம் சுவர்ப்பத்திரிக்கை போன்ற நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல். | யாண்டு முழுவதும் | அறிவியல் மன்றம் | PTA |
| வட்டார வரலாறு எழுதுவதற்கான திறனை வளர்த்துதல். | மாணவர்கள் தங்கள் பள்ளி மற்றும் தங்கள் வட்டாரத்தைக் குறித்த தகவல்களைத் திரட்டி வட்டார வரலாறு எழுதுதல். | கல்வி யாண்டு முழுவதும் | ஆசிரியர்,சமுக அறிவியல் மன்றம் | சமுக அறிவியல் மன்றம் |

முடிவுரை :

பள்ளி மாணவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக இப்பள்ளி முழுமுச்சுடன் செயல்பட்டு வருகிறது. மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதோடு, திறன்களை வளர்ப்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் சமூகத்தில் உன்னத இடத்தில் உயர்வார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை.